இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 22.10.2026

அறிவுலகம் உருவாக்கிய தி.மு.க.!

திராவிட மாடல் ஆட்சியில் திராவிட நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களால் கோவையில் உருவாக்கப்பட்ட பெரியார் அறிவுலகத்தை த.வெ.க. அரசு திறந்து வைத்துள்ளது. திறந்து வைப்பதன் மூலமாகக் கிடைக்கும் பெருமையை இந்த அரசு அடைந்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது அரசியல் இயக்கம் மட்டுமல்ல, அது அறிவியக்கம். அதனால்தான் தி.மு.க. தலைமைக் கழகத்துக்கு **'அறிவகம்'** என்று பெயர் சூட்டினார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய தலைமைக் கழக அலுவலகத்துக்கு **'அண்ணா அறிவாலயம்'** என்று பெயர் சூட்டினார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நூற்றாண்டு நினைவாக **'பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை'** சென்னையில் உருவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

தலைவர் கலைஞரின் வழித்தடத்தில் இரண்டாம் கலைஞராகவே செயல்பட்ட திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள், கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைக் கட்டி எழுப்பினார். கலைஞர் நூற்றாண்டு நூலகம் ரூ.120.75 கோடியில் திட்டமிடப்பட்டு, ரூ.215 கோடி மதிப்பீட்டில், சர்வதேச தரத்தில் கட்டப்பட்டுள்ளது. 3.56 ஏக்கர் நிலப்பரப்பில், 2.13 லட்சம் சதுர அடி பரப்பளவில் தரைத் தளம் மற்றும் 6 தளங்களுடன் (மொத்தம் 7 தளங்கள்) இந்த பிரம்மாண்ட நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

கலைஞர் பிரிவு, குழந்தைகள் நிகழ்ச்சி அரங்கம்,பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் பிரிவு, குழந்தைகளுக்கான நூலகம், தமிழ் நூல்கள்பிரிவு, ஆங்கில நூல்கள், போட்டித் தேர்வர்களுக்கான நூல்கள், மின் நூலகம், பல்லூடகம், நூல்கள் பாதுகாத்தல், ஒளி, ஒலி தொகுப்புகள், காட்சியகம், மின்னுருவாக்கம், பார்வையற்றோருக்கான மின் நூல், ஒலி நூல் ஸ்டுடியோ, நுண்பட அட்டை அறைகள் என ஆறு தளங்கள் உள்ளன மதுரையில். 'பார்த்து பார்த்துக் கட்டினோம்' என்பார்களே அது போல சிந்தித்து சிந்தித்து உருவாக்கப்பட்டது மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம்.

அத்தோடு நிற்கவில்லை அறிவுப்பணி. இதே போல் கோவையிலும் ஒரு நூலகம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். கோவையிலும் கலைஞர் பெயரால் அமைய வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. **'மதுரையில் தலைவர் கலைஞர் பெயரால் அமைந்துவிட்டது, சென்னையில் பேரறிஞர் அண்ணா பெயரில் அமைக்கப் பட்டு விட்டது, கோவையில் அமைவது தந்தை பெரியார் பெயரில் அமையும்'** என்றும் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித் தார்கள்.

'அறிவை விரிவு செய்', 'அறிவை மட்டுமே நம்பு' 'அதுவும் உனது அறிவை மட்டுமே நம்பு' என்று சொன்ன தந்தை பெரியார் பெயரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்ந்தெடுத்தது தனிச் சிறப்பு ஆகும். தந்தை பெரியார் சிந்தனைகளை உலகம் முழுக்க பரப்பும் பெரும் பணியையும் திராவிட மாடல் ஆட்சியானது செய்தது.

திருச்சியில் பெருந்தலைவர் காமராசர் பெயரிலும் நெல்லையில் அமையும் நூலகம் கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் பெயராலும் அமையும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இது அவரது கட்சி சார்பற்ற பரந்த உள்ளத்தின் வெளிப்பாடுகள் ஆகும்.

கோவையில் உருவாகி உள்ள அறிவுலகம் 300 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. 6.78 ஏக்கர் பரப்பளவில் இதன் ஒட்டுமொத்த வளாகமும் அமைந்துள்ளது. 1.98 லட்சம் சதுர அடியில் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. தரைத் தளத்துடன் சேர்த்து 7 அடுக்குகளைக் கொண்டது இது. ஒரு லட்சம் புத்தகங்களைக் கொண்டதாக இக்கருவூலம் அமைக்கப்பட்டுள்ளது. கருத்தரங்குகள் நடத்த அரங்கமும் இருக்கிறது. கோவை மட்டுமல்ல மேற்கு மண்டலத்தைச் சேர்ந்த இளைஞர்கள், மாணவர்கள், மாணவிகள் அனைவருக்கும் அறிவுப் புதையலாக இருக்கப் போகிறது.

திராவிட நாயகன் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களது ஆட்சிக் காலம் என்பது அறிவுலகம் உருவாக்கும் காலமாகவே அமைந்திருந்தது. மாணவ, மாணவியர், இளைஞர்கள் அனைவரையும் அனைத்துக்கும் தகுதிப்படுத்தும் 'நான் முதல்வன்' திட்டம். அரசு பள்ளியில் படித்து உயர் கல்விக்கு வரும் மாணவ, மாணவியரை ஊக்கப்படுத்தும் புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டங்கள். இந்தியாவில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக பள்ளிப் பிள்ளைகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டம். உயர் படிப்பை வெளிநாடுகளுக்குச் சென்று படிக்க அண்ணல் அம்பேத்கர் பெயரில் திட்டம். இப்படி அறிவை விரிவு செய்யும் திட்டங்களைத் தொடங்கினார் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

வெற்றி நிச்சயம் என்ற திட்டத்தின் கீழ் உலகத் தரம் வாய்ந்த முன்னணி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் துறை நிறுவனங்களுடன் இணைந்து தொழில்துறை சான்றிதழுடன் கட்டணமின்றி பல்வேறு துறைகளிலும் குறுகிய கால திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தமிழ்நாடு முழுவதும் உள்ள 18 வயது முதல் 35 வயதுள்ள, படித்த, வேலையில்லாத இளைஞர்கள், பள்ளி அல்லது கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்தியவர்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் இத்திறன் பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பயிற்சியளிக்க தொழில்துறை நிறுவனங்கள் மற்றும் திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்களின் பயிற்சித் தொகையினை அரசே முழுவதுமாக ஏற்கும் என அறிவிக்கப்பட்டது.

இவை எல்லாம் இளைய சமுதாயத்தின் மேல் திராவிட முன்னேற்றக் கழக அரசு வைத்திருந்த பெருமதிப்பின் வெளிப்பாடு ஆகும்.

இன்றைய ஆட்சியாளர்களுக்கு நாம் வைக்கும் கோரிக்கை, இது போன்ற அறிவுப்பணிகளுக்கு தடை போடாமல் ஆட்சி செய்யுங்கள் என்பதுதான். 'கோவையில் கட்டினார்கள் என்றால் அவர்கள் சொந்தப் பணத்திலா கட்டினார்கள்?' என்ற அறிவற்ற கேள்வியை ஒரு அமைச்சர் கேட்டுள்ளார். யாரும், எந்தக் கட்சியும் தங்கள் சொந்தப் பணத்தில் கட்டுவதற்கு பெயர் அரசாங்கம் அல்ல. அரசாங்கத்தின் பெயரால் கட்டுவதற்கு பெயர்தான் அரசாங்கம்.

அரசாங்கப் பணத்தில் குழந்தைக்கு மோதிரம் போட்டு விட்டு தாய்மாமன் தங்க மோதிரம் என்றும், அரசாங்கம் சார்பில் சீர் அனுப்பி விட்டு அண்ணன் சீர் என்றும் பேர் வைத்துக் கொள்ளும் மூடர் கூட்டத்துக்கு யார் வகுப்பு எடுப்பது? வாக்களித்த மக்கள்தான் வகுப்பெடுக்க வேண்டும்!





திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று முன்தினம் (20.10.2026), சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில், 2026ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில், 61 கிலோ எடைப் பிரிவில் நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற மதுரையைச் சேர்ந்த அனுஷ் ப்ரீத்தி நேரில் சந்தித்து, தான் வென்ற பதக்கங்களையும் சான்றிதழ்களையும் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

வடகிழக்குப் பருவமழை தீவிரம்!

தமிழகத்தில் 5 நாட்கள் கனமழை நீடிக்கும்!

சென்னை உள்பட 11 மாவட்டங்களுக்கு பலத்த மழை எச்சரிக்கை!

சென்னை, அக்.22-

வட தமிழக கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென் மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இந்த சுழற்சியில் இருந்து வட மேற்கு வங்கக் கடல் பகுதிகள் வரை ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் அனேக இடங்களில் மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதியில் இரவில் மழை பெய்கிறது. மேலும் 5 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோர மாவட்டங்களில் கன முதல் மிக கனமழையும் அதனையொட்டிய மாவட்டங்களில் கனமழையும் இன்று பெய்யக்கூடும்.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் ஆகிய 11 மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கன மழை பெய்யக்கூடும். திருச்சி, அரியலூர், பெரம்பலூர், ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், தேனி, திண்டுக்கல். மதுரை, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் பலத்த காற்றுடன் கூடிய மிதமானது முதல் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

ஏனைய தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இடி. மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

நேற்று (21-ந்தேதி) தென்காசி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். தூத்துக்குடி. கன்னியா குமரியில் ஒரு சில இடங்களில் அதிகனமழை (ரெட் அலர்ட்) பெய்ய வாய்ப்பு உள்ளது. புதுக்கோட்டை. தஞ்சாவூர், திருவாரூர். நாகப்பட்டினம். மயிலாடு துறை. மதுரை, திண்டுக்கல். தூத்துக்குடி, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளி லும் இடி-மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

22-ந்தேதி கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், தென்காசி, விருதுநகர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும். 23-ந் தேதி நீலகிரி, கோவை, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் மதுரை ஓரிரு மாவட்டங்களில் இடங்களில் கனமழையும் ஏனைய மாவட்டங்களில் மித மான மழையும் பெய்யக்கூடும்.

24 மற்றும் 25-ந்தேதியில் நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, மதுரை, ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இந்த நிலையில் தென் மேற்கு அரபிக் கடலில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று உருவானது.

காலை 5.30 மணி நிலவரப்படி அந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அதே பகுதியில் நீடிக்கிறது. கடந்த 12 மணி நேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து நேற்று காலை அதே இடத்தில் நீடிக்கிறது. இது அடுத்த 12 மணி நேரத்திற்கு தனது தீவிரத்தை தக்க வைத்துக் கொண்டு தொடர்ந்து மேற்கு வட மேற்கு திசையில் நகரக் கூடும்.

அதனைத் தொடர்ந்து இன்று (21-ந் தேதி) வரை மேற்கு வட மேற்கு திசையிலும் 22-ந் தேதி நாளை சோமாலியா கடற்கரை நோக்கி மேற்கு தென்மேற்கு திசையிலும் நகர வாய்ப்பு உள்ளது என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மைய தென் மண்டல தலைவர் விஞ்ஞானி வி.ஆர். துரை தெரிவித்து உள்ளார்.

அவர் மேலும் கூறிய தாவது:-

இந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் தமிழகத்திற்கு எந்த க்கமும் ஏற்படாது. தென்மேற்கு அரபிக் கடலிலும் சோகத்ரா தீவை சுற்றியுள்ள பகுதிகளிலும் சோமாலியா கடற்கரை பகுதிகளிலும் கடல் சீற்றத்துடன் காணப் படும்.

எனவே மீனவர்கள் 22-ந் தேதி வரை அந்தப் பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. வருகிற 24-ந் தேதி வாக்கில் வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி 1உருவாகக் கூடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கைது:

எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் நோக்கில் செயல்படுவதா?

த.வெ.க. அரசுக்கு – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, அக். 22 -

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தாராபுரம் தொகுதி இடைத் தேர்தலின்போது தொடரப்பட்ட வழக்கைக் காரணம் காட்டி, நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் கார்த்திகா அவர்களைத் த.வெ.க. அரசு கைது செய்திருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது.



கொள்கை முரண்பாடுகள் இருந்தாலும், கழக ஆட்சியில் ஜனநாயக வழியிலேயே அவர்கள் மீதான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், த.வெ.க. அரசு எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் நோக்கிலேயே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சட்டம் - ஒழுங்குச் சீர்கேடு, மின்வெட்டு, விலைவாசி உயர்வு என நாள்தோறும் மக்கள் இன்னலுக்குள்ளாகும் வேளையில், மாற்றுக் கட்சியினரை ஒடுக்குவதில் கவனம் செலுத்துவதை நிறுத்திவிட்டு, மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து முறையான ஆட்சியை நடத்த வேண்டும்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தனது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

விடுமுறை விடப்பட்டதாகக் கூறியதால் மாணவர்கள் ஏமாற்றம்!

கோவை பெரியார் அறிவுலகத்திற்கு திடீரென அனுமதி மறுப்பு!

பெரியார் அறிவுலகத்தை காண வந்த மக்கள் ஏமாற்றமடைந்தனர்!

கோவை, அக். 22 -

கோவை பெரியார் அறிவுலகத்திற்கு விடுமுறை விடப்பட்டதால் ஏராளமான மாணவர்களும், பொதுமக்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

கோவையில் பெரியார் அறிவுலகம் தி.மு.க. ஆட்சியில் 300 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டது.

கடந்த வாரம் பெரியார் அறிவுலகம் திறக்கப்பட்டது.

இந்நிலையில், மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் பெரியார் அறிவுலகத்தை காண வந்துள்ளனர்.

ஆனால், பெரியார் அறிவுலகம் விடுமுறை அளிக்கப்பட்டதாக திடீரென அறிவிக்கப்பட்டது.

இதனால், எதிர்பார்ப்புடன் வந்த, மாணவர்கள், இளைஞர்கள், ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

இச்சம்பவம் குறித்து முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கூறுகையில்,

"ஆயுத பூஜைக்கு பெரியார் அறிவுலகத்திற்கே லீவு விட்ட அறிவார்ந்த ஆட்சி இன்றைய த.வெ.க. ஆட்சி" என்று குறிப்பிட்டுள்ளார்.

'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!

